# இலங்கையில் மஸ்ஜிதுகளினூடாக மக்களுக்குக் கல்வியூட்டல் - மலேசிய மஸ்ஜிதுகளை மாதிரியாகக் கொண்ட ஆய்வு

எஸ்.எம்.எம். மஸாஹிர்
முதுநிலை விரிவுரையாளர்,இஸ்லாமிய கற்கைகள் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்,
இலங்கை
mazahirsmm@seu.ac.lk

ஆய்வுச் சுருக்கம்
முஸ்லிம் சமூகத்தில் மஸ்ஜித் வணக்கவழிபாடுகளுக்கு மட்டுமின்றி வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் தலைமைத்துவத்தையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்ற இடமாகக் கருதப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் உருவாக்கிய அல் மஸ்ஜிதுந் நபவீ இதற்கு நல்ல உதாரணமாகத் திகழ்கின்றது.

இலங்கையைப் பொறுத்தளவில் பள்ளிவாசல்கள் வணக்கவழிபாடுகளுக்கும் சில சடங்குகளுக்கும் உரிய இடமாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டும் இடங்களாக அவை பரிணமிக்கவில்லை. இந்நிலையில் அப்பள்ளிவாசல்களை கல்வி வழங்கும் கல்விநிலையங்களாக எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதை ஆய்வு செய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. அதற்கு ஒரு மாதிரியாக (Model) மலேசியப் பள்ளிவாசல்கள் கொள்ளப்பட்டுள்ளன. மலேசியாவில் இயங்கும் மஸ்ஜிதுகள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, பொது மக்களுக்குக் கல்வியூட்டும் விடயத்தை கச்சிதமாக நிறைவேற்றி வருகின்றன. அதற்கான சிறந்த வழிமுறைகளையும் அவை கைக்கொள்கின்றன. அதனால் அம்மஸ்ஜிதுகளை அடியொட்டி இலங்கையிலுள்ள பள்ளிவாசல்களும் பொது மக்களுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை இவ்வாய்வு முன்வைக்கின்றது.

பிரதான சொற்கள்:மஸ்ஜித், கற்பித்தல், முஸ்லிம் சமூகம்

## 1. அறிமுகம்

மஸ்ஜிதுகள் முஸ்லிம் சமூகத்தின் மத்திய நிலையங்களாகும். கொள்கையளவில், அவை சமூகத்தின் அனைத்து விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்த வேண்டிய, எப்போதும் உயிரோட்டமாக இயங்க வேண்டிய பிரதான இடங்களாகும். "முஸ்லிம் உலகில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மீளெழுச்சியினால் பள்ளிவாசல் என்ற நிறுவனம் முஸ்லிம் புத்திஜீவிகளினது கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. அவர்கள் இஸ்லாத்தை விளங்கிக் கொள்வதற்கும் அதன் உணர்வைப் பெறுவதற்கும் ஏற்றவகையிலான சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பள்ளிவாசலின் தற்போதைய பழமைவாத வகிபாகத்தை மீள்பரிசீலனைக்குட்படுத்தும்படி வேண்டுகின்றனர். நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாசலை மாதிரியாகக் (Model) கொண்டு, தற்காலப் பள்ளிவாசல் நிறுவனம் வினைத்திறனுடையதாக மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்." (Tajuddin, 1998>p.1)

ஆன்மீகக் கிரியைகளை மாத்திரம் பிரதானமாக நிறைவேற்றும் ஒரு கட்டடமாக அல்லாமல் வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் முஸ்லிம்சமூகத்தை மேம்படுத்தத்தக்கதான ஒரு மத்திய நிலையமாக பள்ளிவாசலை இறைதூதர் (ஸல்)அவர்கள் அமைத்திருந்தார்கள். (மேலது, 1998, ப.2) நபியவர்களின் பள்ளிவாசல் வித்தியாசமான பல்வேறு துறைகளில் பணியாற்றியது. அதற்கு அண்மையில் அவர் தனது மனைவிமார்களுக்காக ஒரே நிரலில் அறைகளைக் கொண்டதாக தனது வீட்டை அமைத்திருந்தார்கள். அப்பள்ளிவாசல் முஸ்லிம்கள் சந்தித்துக் கலந்துரையாடும் இடமாகவும் கூட்டுத் தொழுகைக்குரிய இடமாகவும் பாவிக்கப்பட்டது. அத்தோடு கல்வி நிலையமாகவும், நீதிமன்றமாகவும், இராணுவப் பாசறையாகவும், வைத்தியசாலையாகவும், வீடற்றோரின் தங்குமிடமாகவும், கொண்டாட்டங்கள் அரங்கேறும் இடமாகவும் உபயோகிக்கப்பட்டது. யூதர்களும் கிறிஸ்தவர்களும் தமது கொடுக்கல் வாங்கலுக்காகவும் நபியவர்களோடு விவாதம் செய்வதற்காகவும் அடிக்கடி அங்கு வந்துபோவார்கள். அதனால் அப்பள்ளிவாசல் முஸ்லிமின் வாழ்வின் உண்மையான மத்திய நிலையமாகத் தொழிற்பட்டது. (மேலது, ப.8)

இலங்கையிலுள்ள மஸ்ஜிதுகள் பொதுவாக வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்குரியதாக மட்டும் இனங்காட்டப்பட்டுள்ளன. அவற்றுக்கப்பால் பொருளாதார, அரசியல், கல்வி, சமூக விவகாரங்களில் காத்திரமான பங்களிப்பை அவற்றினூடாக முஸ்லிம் சமூகம் பெரியளவில் பெற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் அனைத்து அங்கத்தினருக்கும் மார்க்கக் கல்வியை

வழங்குகின்ற பணியை மஸ்ஜிகள் செய்தல் வேண்டும். மார்க்கக் கல்வியை ஊட்டுவதற்கு நடைமுறையிலுள்ள அல் குர்ஆன் மத்ரஸாக்கள், அறபு மத்ரஸாக்கள், அஹதிய்யா வகுப்புகள், இயக்கரீதியான வகுப்புகள், அரசாங்கப் பாடசாலைகள் (இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம் மற்றும் அறபு பாடங்கள்) என்பன சமூகத்தின் அனைத்து மட்டத்தினரையும் உள்ளடக்கியதாகவோ முழுமையானதாகவோ யாவரும் அங்கீகரிப்பதாகவோ அமையவில்லை.

இந்நிலையில், ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் மார்க்க அறிவை வழங்குவதற்குப் பள்ளிவாசல்களைத் தவிர வேறு பொருத்தமான நிறுவனங்கள் இல்லை எனலாம். அவற்றில்தான் சிறியோர் முதல் பெரியோர் வரை, இரு பாலாருக்கும் கல்வியூட்ட முடியும். பொதுவாக மஸ்ஜிதுகளுக்கு முஸ்லிம்களிடத்தில் மதிப்பு, புனிதத்துவம் காணப்படுவதாலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந் நபவியை கல்விநிலையமாக உபயோகித்ததாலும் அங்கு அனைவருக்கும் கல்வியூட்டுவது இலகுவானதாகவும் அங்கீகாரமுடையதாகவும் அமையும்.

இதற்கு ஒரு மாதிரியாக(Model)மலேசியா மஸ்ஜிதுகளைக் கொள்ள முடியும். அங்குள்ள பள்ளிவாசல்கள் முஸ்லிம் சமூகத்திற்கு இஸ்லாமிய அறிவை வழங்குவதற்கு பல வழிமுறைகளை வெற்றிகரமாகக் கையாள்கின்றன. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட குத்பாக்கள், அல்குர்ஆன் பாடசாலைகள், பாடவிதானத்துடன் கூடிய அன்றாட விளக்க வகுப்புகள், வாசிகசாலைகள், விசேட கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றினூடாக இப்பணி மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, எவ்வாறு இலங்கையிலுள்ள பள்ளிவாசல்கள் மூலம் பொது மக்களுக்கு மார்க்க அறிவை வழங்கலாம் என்பதைக் கண்டறிவதை இவ்வாய்வு பிரதான இலக்காகக் கொள்வதோடு அதற்கான சில முன்மொழிவுகளையும் வழங்குகின்றது.

## **2.** ஆய்வுப் பிரச்சினை**(Research Problem)**

இலங்கையிலுள்ள பள்ளிவாசல்கள் பொது மக்களுக்கு மார்க்க அறிவை வழங்குவதில் தமது பங்களிப்பை உரிய முறையில் வழங்குவதில்லை. அதற்கான ஓர் ஒழுங்கும் திட்டமும் அவசியம். அதனை மையமாக வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. ஆய்வுமுறை (**Research Method**)

இந்தப் பண்புசார் (Qualitative) ஆவ்வாய்வுக்கான தகவல்கள் இரு வழிமுறைகளில் சேகரிக்கப்பட்டன.

(அ) அவதானம் (**Observation**):
ஆய்வாளர் இது தொடர்பாக மலேசியா, கோலாலும்பூரிலுள்ள பல்வேறு பள்ளிவாசல்களுக்குச் சென்று பார்த்துள்ளதுடன் சுமார் இரண்டரை வருட காலமாக நேரடியாக அவற்றின் நடவடிக்கைகளை அவதானித்துள்ளார். அந்த வகையில் பெறப்பட்ட தகவல்கள் இதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

(ஆ) நேர்காணல் (**Interview**):
மலேசியாவில் வாழும் இலங்கை முஸ்லிம்களிடமும் மலேசிய முஸ்லிம்களிடமும் பள்ளிவாசல் நிருவாகிகளிடமும் இது தொடர்பாக நேர்காணல் செய்து பெற்ற தகவல்களும் இதற்கு உதவின.

இவ்வாறு முதற்தர தரவுமையங்களை (Primary Sources) கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட தகவல்களை மையமாக வைத்து மலேசிய - இலங்கைப் பள்ளிவாசல்கள் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டன. பொது மக்களுக்குக் கல்வியூட்டுவதற்காக மலேசியப் பள்ளிவாசல்கள் கைக்கொண்டுள்ள வழிமுறைகளை எவ்வாறு இலங்கைப் பள்ளிவாசல்களில் அமுல்படுத்தலாம் எனவும் நோக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பெறப்பட்ட சில முன்மொழிவுகள் இறுதியில் முன்வைக்கப்படுகின்றன.

## **4.** ஆய்வின் இலக்குகள் **(Resaerch Objectives)**

- இலங்கையிலுள்ள பள்ளிவாசல்களின் தற்காலச் செயற்பாடுகள் பற்றி ஓர் மதிப்பீடு செய்தல்.
- மலேசியாவிலுள்ள பள்ளிவாசல்கள் மார்க்க அறிவூட்டலில் கைக்கொள்ளும் வழிமுறைகளை இனங்காணுதல்.
- மார்க்கக் கல்வியூட்டும் விடயத்தில் மலேசியப் பள்ளிவாசல்களையும் இலங்கைப் பள்ளிவாசல்களையும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் இலங்கையிலுள்ள பள்ளிவாசல்கள் எவ்வாறு பொதுமக்களுக்கு மார்க்கக் கல்வியூட்டலாம் என சில விதந்துரைகளை பரிந்துரை செய்தல்.

## 5. இலங்கையில் மார்க்க அறிவை வழங்குவதற்குள்ள ஒழுங்குகள்

இஸ்லாமிய அறிவைப் பெற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அடிப்படைக் கடமையாகக் காணப்படுகின்றது. அல் குர்ஆனிலும் அல் ஹதீஸிலும் அறிவு தேடுவதை

ஊக்குவித்து வந்துள்ள வசனங்கள் பொதுவாக பயன்மிக்க எல்லா கலாஞானங்களையும் குறிப்பதாக இருப்பினும் மார்க்க அறிவு அவற்றுள் பிரதான இடம் வகிப்பதை மறுக்க முடியாது. இறை வணக்கத்திற்குரிய கிரியைகளைச் செய்வதாயினும் பிற மனிதனோடுள்ள தொடர்புகளை சீர்படுத்தி அமைப்பதாயினும் ஒரு முஸ்லிமுக்கு அவை பற்றிய அறிவு இன்றியமையாதது. அவ்வறிவு இன்றி அவனுக்கு அல்லாஹ்வை வணங்குவதையோ குடும்ப, சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்களை மேற்கொள்வதையோ ஷரீஆ சட்டத்தின் பிரகாரம் அமைத்துக் கொள்ள முடியாமற் போகும். இந்தவகையில் ஒரு முஸ்லிமைப் பொறுத்தளவில் மார்க்க அறிவு என்பது மிகக் கட்டாயமான ஒன்றாகும். அதனை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒழுங்கை அமைத்துக் கொடுப்பது அந்த சமூகத்தின் மீது கடமையாகிறது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு மார்க்க அறிவை வழங்குவதற்கு பல்வேறு நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவை இஸ்லாமிய அறிவை அவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு பல உத்திகளைக் கையாள்கின்றன. அல்குர்ஆன் மத்ரஸாக்கள், அறபு மத்ரஸாக்கள், அஹதிய்யா வகுப்புகள், இயக்கரீதியான வகுப்புகள், அரசாங்கப் பாடசாலைகள் (இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம் மற்றும் அறபு பாடங்கள்), பள்ளிவாசல்கள் என அந்நிறுவனங்களை இனங்காணலாம்.

5.1 அல்குர்ஆன் மத்ரஸாக்கள்

அல்குர்ஆன் மத்ரஸாக்களைப் பொறுத்தவரையில் அவை சிறுவர்களுக்கு அல்குர்ஆனை ஓதுவதற்குக் கற்றுக் கொடுப்பதை பிரதான இலக்காகக் கொண்டு செயற்படுகின்றன. அத்தோடு இஸ்லாத்தின் அடிப்படையான சில விடயங்களையும் சில ஒழுக்கங்களையும் அவை கற்றுக் கொடுக்கின்றன. ஆனால் பாடவிதானம், வயது ஒழுங்கு, ஆசிரியர் தகுதி, கற்பித்தல் முறை, கற்பிக்கும் நேரம்,கட்டணம்,ஆசிரியர் பயிற்சி போன்ற எதிலுமே இலங்கை முழுவதிலுமுள்ள அல்குர்ஆன் மத்ரஸாக்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு,ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அத்தோடு சிறுவர்களுக்குமாத்திரம் மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பதாக இவை அமைந்திருப்பதோடு அவர்களின் வயது காரணமாக இஸ்லாத்தின் ஆழமான பல விடயங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க முடியாத நிலை உள்ளது.

5.2 அறபு மத்ரஸாக்கள்

இளைஞர்களுக்கு மார்க்க அறிவை ஓரளவு விரிவாக வழங்குகின்ற நிறுவனங்களாக அறபு மத்ரஸாக்களைக் கொள்ள முடியும். இன்று இலங்கையின் பல இடங்களிலும் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் அறபு மத்ரஸாக்கள் காணப்படுகின்றன. ஆனாலும் அல்குர்ஆன் மத்ரஸாக்கள் போலவே பாடவிதானம், வயது ஒழுங்கு, ஆசிரியர் தகுதி, கற்பித்தல் முறை, கற்பிக்கும் நேரம், கட்டணம், ஆசிரியர் பயிற்சி போன்ற எதிலுமே ஒருமித்த நிலையை எம்மால் காணமுடியவில்லை. அண்மைக் காலங்களில் இதற்கான காத்திரமான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை நடைமுறைக்கு இன்னும் சரியாக வரவில்லை. அதேவேளை அந்தப் புதிய மாற்றங்களை எல்லா மத்ரஸாக்களும் அங்கீகரிப்பதாகவும் தெரியவில்லை. அத்தோடு இம்மத்ரஸாக்களில் சமூகத்திலுள்ள ஒரு சிறு குழுவினரைத் தவிர எல்லோராலும் சென்று கற்க முடியாது.

5.3 அஹதிய்யா வகுப்புகள்

அஹதிய்யா வகுப்புகளும் முஸ்லிம்களுக்கு மார்க்க அறிவை வழங்கும் பிரிதொரு அமைப்பாகும். மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர்கின்ற அதேவேளை பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் இவ்வகுப்புகளில் கலந்து கொள்வர். இதற்கென முறையாக வடிவமைக்கப்பட்ட பாடவிதானம் உண்டு. பாடநூல்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. துணை நூல்களும் இருக்கின்றன. ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்படுகின்றது. இறுதிப் பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்றது. ஆனால் அனைத்து மாணவர்களும் இவற்றில் கலந்து கொள்வதில்லை. பெரும்பாலான இடங்களில் ஆசிரியர்களுக்கு உரிய வேதனம் வழங்கப்படாது, தர்மகாரியமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் தகுதியான ஆசிரியர்கள் இவற்றைக் கற்பிப்பதில்லை. அதனால் இவ்வகுப்புகளினால் ஏற்பட வேண்டிய உரிய பயன் கிடைப்பதில்லை. அத்தோடு சமூகத்திலுள்ள அனைவருக்கும் இவ்வகுப்புகளால் அறிவூட்ட முடியாது.

5.4 இயக்க வகுப்புகள்

த∴வா இயக்கங்களினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற வகுப்புகளும் மார்க்க அறிவை வழங்குகின்றன. ஒவ்வொரு அமைப்பினரும் தமக்கென தனியான நாட்களையும் நேரங்களையும் ஒதுக்கி, வகுப்புகளையும் பயான் நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றனர். ஆண்கள், பெண்களுக்கென தனியான வகுப்புகளும் உண்டு. ஒவ்வொரு அமைப்பினரும் முக்கியத்துவம் கொடுக்கும் விடயதானம் பேசுபொருளாகக் கொள்ளப்படும். ஆனால் மொத்தமாக இந்த த∴வா இயக்கங்களில் ஈடுபடுபவர்கள் மிகச் சொற்பமான தொகையினரேயாவர். மிகப் பெருந் தொகையானோர் எந்த இயக்கத்தோடும் தொடர்பில்லாதவர்களாக உள்ளனர். அதனால்

இயக்கங்களினால் நடாத்தப்படும் வகுப்புகள் மூலமான இஸ்லாமிய அறிவு எல்லா மக்களையும் சென்றடைவதில்லை.

5.5 பாடசாலைக் கல்வி

அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடங்களினூடாக மார்க்க அறிவை வளர்ப்பதற்கான ஏற்பாடுகள் உண்டு. முதலாம் தரத்திலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு{க.பொ.த.(உ/த)}வரையிலான வகுப்புகள் வரை குறிப்பாக இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம், அறபு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அதற்கென பாடவிதானம், பாடநூல்கள், தகுதி பெற்ற ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சி, அரச வேதனம் போன்றன சிறப்பாகவே காணப்படுகின்றன. ஆனால் பாடவிதானம் இஸ்லாத்தை முழுமையாகவும் விரிவாகவும் விளக்குவதாக இல்லை. அத்தோடு முறைசார் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு மாத்திரமே இக்கல்வி கிடைக்கும். ஏனைய சமூக அங்கத்தவர்களுக்கு இதன் மூலம் மார்க்க அறிவு கிடைக்காது.

5.6 பள்ளிவாசல்

மேற்கூறப்பட்ட அனைத்து நிறுவனங்களை விடவும் வித்தியாசமான ஒரு நிறுவனமாக பள்ளிவாசல் காணப்படுகின்றது. அங்கே வயது வேறுபாடின்றி எவரும் வந்து கற்கலாம். இரு பாலாரும் சமுகம் தரலாம். பெரும்பாலும் எல்லாப் பள்ளிவாசல்களிலும் பெண்கள் தொழுவதற்கான பிரத்தியேக இடம் ஒழுங்குபண்ணப்பட்டுள்ளது. பள்ளிவாசலுக்கு ஓர் ஆன்மீகப் பெறுமானமும் வேறு எந்த இடத்திற்குமில்லாத கௌரவமும் முஸ்லிம்கள் மத்தியில் உண்டு. இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந் நபவியை ஒரு கல்விநிலையமாகவும் உபயோகித்தார்கள். திண்ணைத் தோழர்கள் அக்கலாநிலையத்தின் நிரந்தர மாணவர்கள். மிக அதிகமானோர் பகுதி நேர மாணவர்கள். சுழற்சி முறைக் கல்வி பெற்றோரும் அங்கு இருந்தனர். பள்ளிவாசல்தான் அக்காலத்தின் ஏக பள்ளிக்கூடமாக இருந்தது. எனவே, பள்ளிவாசலை கல்வி நிலையமாகப் பயன்படுத்துவதும் ஒரு நபிவழி(ஸுன்னா) vdyhk;.

பர்ஙலீ ஜாத் அஹ்மத் அவர்களின் கருத்துப்படி, ஹிஜ்ரி 459இல் பக்தாதில் அல் மத்ரஸா அல் நிளாமிய்யா தோற்றம் பெறும் வரையில் முஸ்லிம்களுக்கு கல்வி வழங்கும் நிறுவனமாக பள்ளிவாசல் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. ஆயிரக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்களிடம் கற்றுக் கொள்ளவும், தங்களுக்கிடையில் கருத்துப் பறிமாறிக் கொள்ளவும் பள்ளிவாசலையே உபயோகித்தனர். ஹிஜ்ரி 456இற்குப் பின்னரும் கூட பல நூற்றாண்டுகளாக இந்நிலை தொடர்ந்திருந்தது. (Farghali Jad Ahmad, 2013, December 6, p.1). யூஸுஃப் அல் கர்ழாவி இதனைப் பின்வருமாறு விளக்குகின்றார். "இன்றைய பள்ளிவாசல் தனது பொறுப்பிலிருந்து வீழ்ந்து கிடப்பது இஸ்லாமிய வரலாற்றில் ஒரு போதும் காணவியலாத ஒரு நிகழ்வாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்களினதும் ஸஹாபாக்களினதும் காலப்பகுதிகளில் பள்ளிவாசல்தான் முஸ்லிம் உம்மத்தையே இயக்கியது. உமையா, அப்பாஸிய்யா, உஸ்மானிய்யா காலப்பகுதிகளிலும் கூட பள்ளிவாசல் ஓர் உயர்ந்த இடத்தை அடைந்திருந்தது. உஸ்மானிய ஆட்சிக் காலப்பகுதியில் பள்ளிவாசல்கள் 'இபாதா' என்ற பதத்தின் விரிந்த கருத்தைச் செயற்படுத்தும் நிலையங்களாகத் தொழிற்பட்டன. அங்கே பள்ளிவாசலோடு இணைந்ததாக பெரியதொரு நூல்நிலையம் அமைந்திருக்கும். மாணவர்கள் படிப்பதற்கான இடமும் வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். அங்கு விரிவான இடவசதிகள் இருக்கும். பள்ளிவாசலைச் சூழ பூங்காவனங்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் நவீன காலத்தில் மதச்சார்பற்ற சிந்தனைக்கு அதிகமான முஸ்லிம்கள் ஆட்பட்டதனால் வாழ்வு, உலகம், நாடு, அரசியல், சமூகம் போன்ற எல்லாவற்றிலிருந்தும் மார்க்கம் பிரிக்கப்பட்டது. அவ்வாறு பிரித்ததானது பள்ளிவாசலை மண்ணறைகளாக மாற்றிவிட்டது. அதனால் பள்ளிவாசலால் நிகழ வேண்டிய அநேக அம்சங்களை மக்கள் இழந்து விட்டார்கள்." (யூஸுஃப் அல் கர்ழாவி, 2013, டிசம்பர் 6, ப.3)

6. இலங்கையும் மலேசியாவும்

மஸ்ஜித் என்ற சொல் ஸஜத என்ற பதத்திலிருந்து உருவானதாகும். சிரம் பணிந்து வணங்குதல் என்பது அதன் பொருளாகும். முஸ்லிம்களின் தொழுகையில் சிரம் பணிதல் (ஸுஜூது) என்பது மிகப் பிரதான பகுதியாகும். அந்த அடிப்படையில் மஸ்ஜித் என்பது முஸ்லிம்கள் தொழுகைக்காக உபயோகிக்கும் வணக்கஸ்தலத்தைக் குறிக்கும்.

முஸ்லிம் சமய, கலாசார விவகாரத் திணைக்களத்தின் தகவல்படி இலங்கையில் 2000இற்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் உண்டு. பொதுவாக எல்லாப் பள்ளிவாசல்களும் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் இடங்களாகவே காணப்படுகின்றன. ஒரு சில பள்ளிவாசல்களில் சமூக, பொருளாதார, கல்வி விவகாரங்கள் நடந்தேறினாலும் பொதுவாக எல்லா இறை இல்லங்களிலும் இந்நிலை இருப்பதில்லை.

மலேசியா, தென் கிழக்காசிய நாடுகளுள் பிரதானமான ஒரு நாடாகும். 28,700,000 சனத்தொகையைக் கொண்ட இந்நாட்டில் சுமார் 62 வீதமானோர் முஸ்லிம்களாவர். இலங்கை, தென் இந்தியாவைப் போலவே பொதுவாகப் பின்பற்றப்படும் மத்ஹபாக ஷாபிஈ மத்ஹறப்காணப்படுகின்றது. தொழுகை போன்ற

அன்றாட கிரியைகள் ஷாபிஈமத்ஹபை அடியொட்டியே செயற்படுத்தப்படுகின்றன.

இந்நாட்டில் சுமார் 5000 பள்ளிவாயில்கள் இருக்கின்றன. மலேசியா 14 மாநிலங்களைக் (States) கொண்டது. கிலந்தான் போன்ற மாநிலங்களில் இஸ்லாமிய ஆட்சிக்கு மிக நெருக்கமான அமைப்புக் காணப்படுகின்றது. அவற்றை விடுத்து, மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் உள்ள பல பள்ளிவாசல்களை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது என்பதைக் கருத்திற் கொள்க. கட்டுரையாளனின் நேரடி அவதானத்தின் மூலமும் மலேசிய நண்பர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள் ஊடாகவும் மிக நீண்ட காலமாக மலேசியாவில் வாழும் இலங்கை நண்பர்களின் கருத்துக்கள் மூலமும் இதற்கான தகவல்கள் பெறப்பட்டன.

இங்கு மூன்று வகையான பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன. மஸ்ஜித் எனப்படுகின்ற ஜும்ஆ பள்ளிவாசல்கள், மத்ரஸா எனப்படும் மார்க்க போதனைக்கான பள்ளிவாசல்கள் அத்தோடு 'சூராவூ' என அழைக்கப்படுகின்ற தொழுமிடங்கள். மத்ரஸா பள்ளிவாசல் கல்வி நோக்கங்களுக்காகவே நிர்மாணிக்கப்பட்டவையாகும். முற்காலத்தில் அவை அல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய சட்டதிட்டங்களைக் கற்றுக் கொடுப்பதற்காக வேண்டி புலமைபெற்ற அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டன. பிற்பட்ட காலங்களில் அவை தனிநபர் வக்ப் மூலமாகவும் அரசாங்கத்தின் மூலமாகவும் உருவாக்கப்பட்டன. (Tajuddin, 1998>p.7) மூன்றாவது வகையான 'சுராவூ' இரு வகையாக அமைந்துள்ளது. எமது நாட்டில் 'தைக்கா' எனப்படுகின்ற இடங்களுக்கும் 'முஸல்லா' எனப்படுகின்ற தொழுகை அறைகளுக்கும் 'சுராவூ' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது. 'சுராவூ' ஒரு கட்டடத்தின் தற்காலிக அறை முதல் ஒரு சிறிய சமூகத்தினருக்கான தனியான கட்டடம் வரை பல்வேறு வகைகளில் அமைந்திருக்கும். அவை வெள்ளிக்கிழமை ஜும்ஆ நடாத்துவதற்கு அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்படாதவையாகும;. (Tajuddin, 1998>p.7) 'சுராவூ' எல்லா இடங்களிலும் போல காணப்படுகின்றது. எந்த ஒரு திணைக்களம், தொடர்மாடி வீடு, மைதானம், வியாபார பல்கட்டிடத் தொகுதி (Shopping Complex) மற்றும் பொது இடங்களில் 'சுராவூ' இல்லாதிருப்பதில்லை.

7. மலேசியப் பள்ளிவாசல்களின் கற்பித்தல் ஒழுங்குகள்

இப்பள்ளிவாசல்களில் பொது மக்களுக்குக் மார்க்கக் கல்வியூட்ட பல்வேறு ஒழுங்குகளை அமைத்து வைத்துள்ளனர். அவற்றுள் சில இலங்கைப் பள்ளிவாசல்களிலும் காணப்படினும் செயற்படுத்தும் முறையிலும் ஒழுங்கிலும் வேறுபாடு காணப்படுகின்றது. அவற்றைப் பின்வருமாறு நோக்குவோம்.

7.1 குத்பாக்கள்

ஜும்ஆ குத்பாக்கள் சுருக்கமானவை. 15 – 20 நிமிடங்கள் கொண்டதாக அவை அமைந்திருக்கும். அதன் காரணமாக அதான் ஒளிக்கின்ற போதே பள்ளிவாசல் நிரம்பிக் காணப்படும். குறிப்பிட்ட தலைப்புக்குள் இருக்கும். நன்கு தயார்படுத்தப்பட்டிருக்கும். ஆதாரங்கள் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கும். அல்குர்ஆன் வசனங்களாயின் சூராவின் பெயர், வசன இலக்கம் குறிக்கப்பட்டிருக்கும். நபிமொழியாயின் ஹதீஸ் கிரந்தத்தின் பெயர், சிலபோது ஹதீஸ் இலக்கமும் தரப்பட்டிருக்கும். கட்டுக் கதைகளோ ஆதாரமற்ற சம்பவங்களோ முன்வைப்பது மிக மிகக் குறைவு. காலத்திற்குத் தேவையான தலைப்புக்களில் அவை நிகழ்த்தப்படும். இஸ்லாமிய வங்கியியல், குற்றவியல் சட்டங்கள் போன்ற தலைப்புக்களும் பேசப்படும். முற்கால அறிஞர்களான இப்னுல் கையும் அல் ஜெளஸிய்யா, இப்னு தைமிய்யா போன்றவர்களையும் நவீன கால அறிஞர்களான ஸஈத் ரமழான் அல் பூதி, ஸையித் குதுப், முஹம்மத் குதுப், முஹம்மத் அல் கஸ்ஸாலி, யூசுப் அல் கர்ளாவி போன்றவர்களையும் மேற்கோள் காட்டி, குத்பாக்கள் இடம்பெறுகின்றன. அவர்களது நூல்களின் பெயரோடு பக்க எண்ணும் விபரிக்கப்படும்.

சிலர் பிரசங்கம் செய்வர். வேறு சிலர் எழுதிக் கொண்டு வந்து வாசிப்பர். சிலர் குத்பாவையும்Multi Media Presentationஆகச் செய்வர். குத்பாவின் இறுதியில் அதன் சுருக்கம்Points formஆக இலக்கமிட்டுக் காட்டப்படும். சில பள்ளிவாசல்களில் பிரமாண்டமான திரைகள் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக குத்பா பிரசங்கம் ஒலி/ஒளிபரப்பப்படும். பெரும்பாலும் மிக அமைதியாகவே குத்பாக்கள் இடம்பெறுகின்றன. ஆக்ரோசமாகவோ உரத்த தொனியிலோ குத்பாக்கள் இடம்பெறுவதில்லை. குத்பா ஓதும் மேடை மிக உயர்ந்ததாக (சுமார் 10 - 12 அடி) அமைக்கப்பட்டிருப்பதோடு முன்னால் Podium ஒன்றும் வைக்கப்பட்டிருக்கும். அதன் காரணமாக கதீபுடைய நெஞ்சுக்கு மேற்பட்ட உறுப்புகளே பொது மக்களுக்குத் தெரியும்.

ஜும்ஆப் பிரசங்கம் ஆரம்பமாக முன்பு 'குத்பா'நடாத்துபவரால் அல்லது வேறொரு ஆலிமால் ஒரு 'பயான்' நடாத்தப்படும். அதனை 'தத்கிரா' (تذكرة)என அழைக்கின்றனர். பெரும்பாலும் அது அன்றைய குத்பாவுடைய

தலைப்பை ஒட்டியதாகவே இருக்கும். அதனைத் தொடர்ந்து நிர்வாகத்தினரால் அறிக்கை ஒன்று வாசிக்கப்படும். அதில் அன்றைய ஜும்ஆ குத்பாவிலிருந்து அடுத்த ஜும்ஆ வரையுமுள்ள நிகழ்ச்சிநிரல் முன்வைக்கப்படுவதோடு, வரவு – செலவு விபரங்களும் ஏனைய அறிவித்தல்களும் வாசிக்கப்படும். அதன் பிறகே குத்பா இடம்பெறும்.

7.2 அன்றாட வகுப்புக்கள்

தொழுகை தவிர மார்க்கக் கல்வியை ஊட்டுகின்ற ஓரிடமாகவும் இங்கு பள்ளிவாசல்கள் தொழிற்படுகின்றன. பொதுவாக ம.ஃரிப், சுபஹ் தொழுகைகளுக்குப் பின்னர் மிகத் தகுதியான ஆலிம்களால் மார்க்க வகுப்புகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவை உபந்நியாசங்களாக இல்லாமல் வகுப்புகள் **(Class)**போன்று நடாத்தப்படுகின்றன. இங்கு மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பவர் 'உஸ்தாத்' என அழைக்கப்படுகின்றார். இவ்வாறு வகுப்பு நடாத்துபவர்கள் துறை சார்ந்த அறிஞர்களாகவும் சிலர் கலாநிதிகளாகவும் சிலர் பல்கலைக்கழக பேராசிரியர்களாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் நன்கு அறபு மொழி தெரிந்தவர்களாகவும் சரளமாக அதனைப் பாவிக்கக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

ஒரு வாரத்திற்குரிய நேரசூசி சில இடங்களில் ஒரு மாதத்திற்குரிய நேரசூசி ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, ஓடும் திரைகளில் காண்பிக்கப்படுகின்றது அல்லது அறிவித்தல் பகுதியில் ஒட்டப்பட்டிருக்கும். நிகழ்ச்சிகள் தலைப்பு வாரியாக ஒழுங்குபடுத்தப்பட்டு, அவை தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அக்லாக், பொதுவானவை என வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய பாடநூல்களும் (Text Books) தயாரிக்கப்பட்டு, பள்ளிவாசலில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக வாசிக்கக் கூடியவாறு அறபு, மலே மொழி நூல்களும் காணப்படுகின்றன. பள்ளிவாசல் இமாமின் மூலமாக ளுஹருக்குப் பிறகு பெரியவர்களுக்கான தஜ்வீத் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

பெண்களுக்கு எல்லாப் பள்ளிவாசல்களிலும் ('சுராவூ' உட்பட) ஐநேரத் தொழுகைக்கான ஏற்பாடுகள் உண்டு. பெரும்பாலும் உட்பள்ளிவாசலிலேயே (சில இடங்களில் முழுமையாக மறைத்தும் வேறு சில இடங்களில் முன்பக்கம் மறைக்காமலும்) அவர்களுக்கான தொழுகை மண்டபம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அவர்கள் ஐநேரமும் தொழுவதற்காக வருவதால் ஆண்களைப் போலவே அவர்களுக்கும் மார்க்க வகுப்புகளில் சரிசமமாகக் கலந்து கொள்ள முடியும். அதற்கு மேலதிகமாக அஸருக்குப் பிறகு பெண்களுக்கான வகுப்புகளும் பெண் ஆலிமாக்களால் நடாத்தப்படுகின்றன.

பொது மக்கள் கொப்பியுடனும் பேனையுடனும் அமர்ந்திருப்பதை சாதாரணமாகக் காணமுடியும். வகுப்பின் இடைநடுவே நிறுத்தி கேள்வி கேட்கவும் முடியும். வகுப்பு முடிவடைந்ததும் கேள்வி கேட்பதற்கு அவகாசமும் வழங்கப்படும். பள்ளிவாசல்களில் நிரந்தரமாகவேMulti Media Presentationஇற்குரியProjectorck; Screenஉம் நிறுவப்பட்டுள்ளன. சிலர் நேரடிVideo Presentationஆக வகுப்பை நடாத்துவர். வேறு சிலர்Multi Media Presentationஆக அதனைப் பயன்படுத்துவர். இமாம் தொழுகை நடாத்தும் இடத்திற்குப் பக்கத்திலேயே வகுப்பு நடாத்துவதற்கான மேசையும் கதிரையும் நிரந்தரமாகவே வைக்கப்பட்டிருக்கும். வகுப்புகள் ஆக்ரோசமோ உரத்த சப்தமோ இன்றி மிக அமைதியாக இடம்பெறும்.

வகுப்பை நடாத்துவோர் கல்வியும் புலமையும் பெற்றவர்களாக உள்ளனர். சிலர் எகிப்து, ஸவூதி அரேபியா, குவைத், ஜோர்தான் போன்ற அறபு நாடுகளில் கற்றுத் தேர்ந்தவர்களாக உள்ளனர். வேறு சிலர் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்களாக உள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் தொகையும் மிக உயர்ந்ததாக உள்ளது. ஒரு மணித்தியால வகுப்பிற்கு 300 மலேசிய ரிங்கிட் (சுமார் 12,000 இலங்கை ரூபா) வழங்கப்படுகின்றது.

7.3 அல்குர்ஆன் வகுப்புக்கள்

பொதுவாக எல்லாப் பள்ளிவாசல்களிலும் போல சிறு பிள்ளைகளுக்கு மார்க்க அறிவைக் கற்றுக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் காணப்படுகின்றன. சில பெரிய பள்ளிவாசல்களில் அதற்கென தனியான கட்டடங்களும் ஆசிரியர்களும் (ஆண், பெண் ஆசிரியர்கள்) உண்டு. ஒரு பாடசாலைக்கு இருக்கின்ற அத்தனை ஒழுங்குகளும் அங்குண்டு. நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், பிள்ளைகளுக்கான சீருடை, தகுதியான ஆசிரியர்கள், பாடவிதானம் என்பனவெல்லாம் சரியாக அமைக்கப்பட்டுள்ளன.

7.4 நூல் நிலையங்கள்

சில பள்ளிவாசல்களில் சிறியளவிலான நூல் நிலையம் காணப்படுகின்றது. மார்க்கத்தை விளக்குகின்ற முக்கியமான நூல்கள் அங்குள்ளன. தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வருபவர்கள் தமது அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு இந்நூல்நிலையத்தை உபயோகிப்பர்.

7.5 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள்

இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக நவீன கல்வி முறைக்கேற்ப கருத்தரங்குகள் (Seminar) மற்றும் பயிற்சிப்பட்டறைகள் (Workshop) அடிக்கடி ஏற்பாடு செய்யப்படுகின்றன. சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என தனித்தனிக் குழுமங்களுக்கென தனியான கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்படுகின்றன. அவை தற்காலத்தில் அவ்வக் குழுவினருக்கு அவசியப்படுகின்ற தலைப்புகளில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

அதிகரித்துவரும் குற்றச் செயல்கள், இஸ்லாமிய காப்புறுதி முறை, போதைப்பொருள் பாவனை,பைதுல் முஸ்லிம் (முஸ்லிம் வீடு), குழந்தை வளர்ப்பு போன்ற தொனிப்பொருள்களில் அவை அமைந்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் மூன்று நாட்கள், ஒரு வாரம் என அவை முழுமையாகத் தங்கியிருந்து பயிற்சி பெறும் நிகழ்வாக (Residential Training Program) அவை நடாத்தப்படும். சிலபோது இலவசமாகவும் சிலபோது அனுசரனைகளினூடாகவும் வேறு சிலபோது கட்டணம் அறவிடப்பட்டும் இவை நடந்தேறுகின்றன.

7.6 துண்டுப் பிரசுரங்கள்

மலேசியாவில் மார்க்க அறிவைப் பரப்புவதில் துண்டுப் பிரசுரங்களுக்கும் ஒரு காத்திரமான பங்குண்டு. பொதுவாக பள்ளிவாசல்களில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் துண்டுப் பிரசுரங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு விடயத்தை மட்டும் விடயதானமாகக் கொண்டு, ஆதாரபூர்வமாக அவை எழுதப்பட்டு, பிரசுரிக்கப்பட்டிருக்கும். உதாரணமாக: இஸ்லாத்தில் இறைவணக்கம்>The Qur'an The Final Revelation, The Truth about Jesus Christ (Peace be upon him) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்துண்டுப் பிரசுரங்கள் தெளிவாகவும், அழகாகவும், வாசிக்க இலகுவானதாகவும், இலகுவாகக் கையாளத்தக்கதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக சில பள்ளிவாசல்களில் முக்கியமான சில விவகாரங்களை நிரந்தரமாகப் பதிவு செய்து வைத்துள்ளனர். உதாரணமாக தமன் மெலாதியில் அமைந்துள்ள மஸ்ஜிது ஸலாஹுத்தீன் அல் அய்யூபியில் புகைத்தல் ஹராம் என்ற விடயத்தை பள்ளிவாசல் தூணில் பொறித்து வைத்துள்ளனர். அதற்கான ஆதாரங்கள் மற்றும் காரணங்கள் மிகத் தெளிவாக அதில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் மலேசியாவில் புகைத்தல் என்பது சர்வ சாதாரணமான ஒரு விடயமாகும். அதனால் அது தவறானது என்பது பள்ளிவாசலுக்கு வரும் ஒவ்வொருவரின் பார்வையிலும் எப்போதும் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

அஸர் தொழுகைக்குப் பிறகு ஹதீஸ் விளக்க நூல் வாசிக்கப்படும். ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களுடன் அதற்கான விளக்கமும் வாசிக்கப்படும். மொத்தமாக ஐந்து நிமிடங்களுக்குள் அந்த வாசிப்பு முடிந்துவிடும்.

8. முன்மொழிவுகள்

இலங்கைப் பள்ளிவாசல்களை பொது மக்களுக்குக் கல்வியூட்டும் இடமாக மாற்றியமைப்பதற்கு கீழ்வரும் விதந்துரைகளை முன்வைக்க முடியும்.

8.1 பாடவிதானம்

பொதுவாக இஸ்லாத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இதற்கான பாடவிதானம் அமைக்கப்படுதல் வேண்டும். நம்பிக்கைக் கோட்பாடுகள் (العقائد),வணக்கவழிபாடுகள; (العبادات),விவாக, விவாகரத்துச் சட்டங்கள; (المناكحات),கொடுக்கல் வாங்கல் சட்டங்கள; (المعاملات), குற்றவியல் சட்டங்கள; (الجنايات),ஒழுக்கவியல் (الأخلاقيات)என்ற இஸ்லாத்தின் பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதாக அப்பாடவிதானம் அமைதல் வேண்டும்.

அத்தோடு இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன், அல்ஹதீஸ் என்பவற்றின் விளக்கமும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். இவற்றிலும் சிலவற்றுக்கு கூடுதல் முக்கியத்துவமும் சிலவற்றுக்கு மேலோட்டமான அறிமுகமும் வழங்க முடியும். உதாரணமாக: இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தளவில் விவாக, விவாகரத்துச் சட்டங்கள், கொடுக்கல் வாங்கல் சட்டங்கள், ஒழுக்கவியல் என்பன விரிவாக விளக்க வேண்டிய பகுதிகளாகும். குற்றவியல் சட்டங்கள் பற்றிய விரிவான விளக்கம் அவர்களுக்குத் தேவைப்படாது.

அதே நேரத்தில் இலங்கை முஸ்லிம்கள் அதிகமாகத் தெரிந்திருக்க வேண்டிய சில பகுதிகள் பற்றியும் விசேடமாகக் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக: பிற சமயத்தவருடனான உறவு, வாரிசுரிமை, கூட்டு ஸகாத், வட்டி, இலஞ்சம், போதைப் பொருள் பாவனை/விற்பனை, பெண்ணுரிமை, சிறுவர் துஸ்பிரயோகம், சமூகக் கடமைகள், பொது இடங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், சூழல் பாதுகாப்பு போன்றன தனியாகவும் விரிவாகவும் விளக்க வேண்டிய பகுதிகளாகும்.

இப்பாடவிதானத்தை உருவாக்குவதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அமைப்பே பொருத்தமானது. அவ்வமைப்பின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு பகுதியிலும் துறைசார்ந்த அறிஞர்களை உள்ளடக்கியதாகவும் பாடவிதானத்

தயாரிப்பு தொடர்பாகக் கற்றறிந்தவர்களை உள்ளடக்கியதாகவும் பாடவிதானக் குழு அமைக்கப்படுதல் வேண்டும். இதற்கு ஏனைய

முஸ்லிம் நாடுகளிலுள்ள பாடவிதானங்களை மாதிரியாகக் கொள்ள முடியும். ஆனால் அவை அப்படியே பிரதிபண்ணப்படுதல் கூடாது.

8.2 பாடநூல்கள்

பாடவிதானத்தை மையப்படுத்தியதாக பாடநூல்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். அவை இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையோரின் தாய்மொழி என்ற வகையில் தமிழிலில் அமைதல் வேண்டும். பின்னர் அதனை சிங்களத்திற்கும் ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்ப்புச் செய்து கொள்ளலாம்.

பாடநூல் தயாரிப்புக் குழுவிலும் அவ்வத்துறைகளில் புலமை பெற்றவர்களை ஈடுபடுத்துவதோடு பாடநூல் தயாரிப்பு பற்றித் தெரிந்தவர்களையும் மொழிவன்மை கொண்டோரையும் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அமைப்பின் தலைமையிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

பாடநூல்களை உருவாக்கும் போது பிற முஸ்லிம் நாடுகளிலுள்ள பாடநூல்களை மாதிரியாகக் கொள்ள முடியும். தப்ஸீர், ஹதீஸ் விளக்கம் போன்றவற்றை சிலபோது அப்படியே மொழிபெயர்ப்புச் செய்யவும் முடியுமாக இருக்கும். அத்தோடு பாடநூல்களிலுள்ள விடயங்களை விரிவாக விளக்கக் கூடிய நூற்பட்டியல் (Reference Book List) ஒன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

8.3 கற்பித்தற் பயிற்சி

பாடவிதானமும் பாடநூல்களும் மாத்திரம் எமது இலக்கை எட்டச் செய்யாது. அவற்றைச் சரியாகவும் தெளிவாகவும் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும். நிச்சயமாக அவர்கள் அறபு மொழியைக் கையாளத் தெரிந்தவர்களாகவும் மார்க்க அறிவு நிரம்பியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பொதுவாக எமது மார்க்க அறிஞர்களுக்கு உபன்னியாச அமைப்பே பரீட்சயமானது. இங்கு அதனை முற்றிலுமாக மாற்றி, கற்பித்தலாக அமைத்தல் வேண்டும். அதனால் இதற்கு முழுமையான ஒரு பயிற்சி அவசியம். விடயதானத்தை விளக்கும் ஆற்றலோடு கற்பித்தல் நுட்பங்கள், நவீன கருவிகளை உபயோகித்தல், நேர முகாமைத்துவம் தொடர்பான அறிவும் அவர்களுக்கு அவசியமாகும். இந்த தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கு சமயத்துறை சாராதவர்களும் பயிற்சியளிக்கலாம்.

8.4 நவீன சாதனங்கள்

பள்ளிவாசல்களில் கற்பித்தலுக்குரிய நவீன சாதனங்கள் பொருத்தப்படுதல் வேண்டும். white board, multi media projector, big screens, laptop போன்ற கற்பித்தற் சாதனங்கள் நிரந்தரமாக இணைக்கப்படுதல் வேண்டும். தற்காலத்தில் பள்ளிவாசல்களில் தற்காலிகமாக இவற்றைப் பிரயோகிக்கும் பழக்கம் வந்துள்ளது.

8.5 நேரசூசி

பாடவிதானத்தைக் கற்பிப்பதற்கான நேரசூசி மிகக் கவனமாக தயாரிக்கப்படுதல் வேண்டும். அந்தந்த ஊர்களைப் பொறுத்தவரையில் இது வித்தியாசமாக அமையலாம். மிகமுக்கியமான சில பாடங்கள் அதிகமானோர் கலந்து கொள்ளக்கூடிய நாட்களில் அமையவேண்டும். நாட்களைப் போலவே எந்தெந்த நேரங்களில் நடாத்துவது என்பதும் ஊருக்கேற்ற வகையில் வித்தியாசமாக அமையலாம். எப்படியாயினும் பொது மக்களுக்குப் பரீட்சயமாகும் வகையில் அந்த நேரசூசி பழக்கப்படுதல் வேண்டும். நிரந்தரமாக எழுதி வைப்பதனூடாகவோ துண்டுப் பிரசுரத்தினூடாகவோ அப்பரீட்சயத்தை ஏற்படுத்தலாம்.

8.6 வேதனம்

இம்முயற்சி மார்க்கக் கல்வியைப் படித்த சமூகத்தை உருவாக்கும் நோக்கம் கொண்டதாகையால் அது திறம்படச் செய்யப்படுதல் வேண்டும். அதனால் கல்வியூட்டக்கூடிய ஆசிரியர்களுக்குரிய தொகை கௌரவமானதாகவும் அதிகமானதாகவும் இருத்தல் வேண்டும். இலவசமாகத்தான் இப்பணி செய்யப்பட வேண்டும் என நினைத்தால் நாம் எதிர்பார்க்கும் இலக்கை எம்மால் அடைந்து கொள்ள முடியாமற் போகும். அவர்களுக்கான நல்லதொரு தொகை அந்தந்தப் பள்ளிவாசல்களால் வழங்கப்படுதல் அவசியமாகும்.

8.7 ஹதீஸ் அறிமுகம்

ரியாழுஸ் ஸாலிஹீன் என்ற நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இன்றும் பள்ளிவாசல்களில் வாசிக்கப்படுகின்றது. அது போன்ற நூல்களை அவ்வாறு வாசிப்பது மக்களுக்கு சலிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைதல் வேண்டும். இதனை வாசிப்பதற்கான நோக்கம் பொது மக்களுக்கு ஹதீஸ்களைக் கொண்டு சேர்ப்பதாக அமைய வேண்டும். அதனால் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களுக்கு அதிகமாக வாசிக்கக் கூடாது. அதிகம் வாசித்து எதனையும் ஞாபகம் வைத்துக் கொள்ள முடியாது போவதை விட வாசிக்கப்பட்ட ஒரு ஹதீஸை அல்லது இரண்டு ஹதீஸ்களை அவர்கள் ஞாபகம் வைத்துக் கொண்டாலே போதுமானது.

8.8 கருத்தரங்குகளும் பயிற்சிப்பட்டறைகளும்
ஒரு குறிப்பிட்ட தொனிப்பொருளில் கருத்தரங்குகளையும் பயிற்சிப்பட்டறைகளையும் ஏற்பாடு செய்வது மிகப் பெரிய பயனைத் தரும். க.பொ.த. (சா/த), (உ/த) பரீட்சைகள் முடிவடைந்ததும், விடுமுறை காலங்களில் மாணவர்களுக்காக இவற்றை ஏற்பாடு செய்யலாம். பெண்களுக்கு வேறாகவும் ஆண்களுக்கு வேறாகவும் அவரவர்களுக்குப் பொருத்தமான தலைப்புகளில் நடாத்த முடியும். திருமணம் முடிக்கவிருக்கும் இரு பாலாருக்கும் தனித்தனியாக விவாகம், விவாகரத்து, குடும்ப வாழ்வு போன்றவற்றை இஸ்லாமிய மற்றும் மனோதத்துவ முறைப்படி விளக்கலாம்.

9. நூல் நிலையம்
பள்ளிவாசல்களில் சிறியளவிலாயினும் நூல்நிலையங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும். இறை இல்லங்கள் ஆன்மீகப் பசியைத் தீர்ப்பது போலவே அறிவுப் பசியைத் தீர்க்கும் ஓர் இடமாகவும் மாற வேண்டும். அங்கு நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் இருப்பது போலவே குறுவட்டுக்களும் (CD) வைக்கப்படுதல் வேண்டும். மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதாலும் இலகுவாகக் கையாளத் தக்கதாக இருப்பதாலும் குறுவட்டுக்கள் அவசியப்படுகின்றன.
பள்ளிவாசலுக்கு வருவோர் உட்கார்ந்து வாசிப்பதற்காகவும் தகவல்களைப் பதிவு செய்து கொள்வதற்காகவும் கதிரை, மேசைகளும் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

10. கண்டறிந்தவை **(Findings)**
- பொதுவாக அறிவு தேடுவது ஒரு முஸ்லிமின் மீது கடமையாக இருப்பதுடன் மார்க்கக் கல்வியை கற்றுக் கொள்வது மிக அத்தியவசியமாகக் காணப்படுகின்றது. அதனை பொது மக்களுக்கு வழங்குவதற்கு பல்வேறு நிறுவனங்கள் உழைத்த போதிலும் பள்ளிவாசல் ஊடாக அதனை வழங்குவது பல்வேறு வகையிலும் சிறந்ததாக அமையும்.
- பொது மக்களுக்கு சமயக் கல்வியூட்டுவதில் மலேசியப் பள்ளிவாசல்கள் சிறந்த வழிமுறைகளை முன்னெடுத்துள்ளன. அவை இலங்கையிலுள்ள பள்ளிவாசல்களிலும் அமுல்படுத்தத்தக்கனவாக உள்ளன.
- மலேசியப் பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை இடம்பெறும் குத்பாக்கள்,அதற்கு முன் இடம்பெறும் தத்கிரா, அன்றாட வகுப்புகள், அல் குர்ஆன் வகுப்புகள், நூல்நிலையங்கள், துண்டுப் பிரசுரங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் மூலமாக மார்க்கக்கல்வி வழங்கப்படுகின்றது. அவற்றை இலங்கைச் சூழலுக்கு ஏற்றவகையில் அமைத்துக் கொண்டால் இலங்கை முஸ்லிம்களுக்கு பயன்மிக்கதாக அமையும்.

11. ஆய்வு முடிவு
பள்ளிவாசல்கள் ஆற்றவேண்டிய பணிகள் பற்றிய சரியான புரிதல் முஸ்லிம்களுக்கு குறிப்பாக பள்ளிவாசல் நிருவாகிகளுக்கு இருத்தல் வேண்டும். அவை வெறுமனே வணங்கிவழிபடும் இடமாக மட்டும் அடையாளப்படுத்தாமல் சமூக, அரசியல், பொருளாதார, கல்வி விடயங்களை முன்னெடுக்கும் ஒரு பன்முக மத்திய நிலையமாகக் கருதப்படுதல் வேண்டும். நபி (ஸல்) அவர்களின் அல் மஸ்ஜிதுந் நபவி ஒரு கேந்திர ஸ்தானமாகச் செயற்பட்டமை இதற்கு தக்க முன்மாதிரியாகும். அந்தவகையில் பொது மக்களுக்குக் கல்வியூட்டும் விடயத்தை எவ்வாறு இலங்கைப் பள்ளிவாசல்களில் நடைமுறைப்படுத்தலாம் என இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது. அதற்கு மலேசியப் பள்ளிவாசல்கள் மாதிரிகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான முன்மொழிவுகள் இவ்வாய்வின் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன. பாடவிதானம், பாடநூல்கள், கற்பித்தற் பயிற்சி, நவீன சாதனங்கள், வேதனம், நேரசூசி, ஹதீஸ் அறிமுகம், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், நூல்நிலையம் என்ற தலைப்புக்களில் அவை விபரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வுக்காக மலேசியாவில் குறிப்பாக அவதானிக்கப்பட்ட பள்ளிவாசல்கள்:
01. அல் மஸ்ஜித் அல் அளீம்(المسجد العظيم)– பன்டான் இன்டாஹ்
02. அல் மத்ரஸா அல் இ:.திஸாமிய்யா المدرسة) (الإعتصامية– nrlghf;> jkd; மெலாதி
03. சுல்தான் அஹ்மத் ஷாஹ் பள்ளிவாசல் - சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், கொம்பார்க்
04. மத்ரஸது நூருல் முத்தகீன் (مدرسة نور المتقين)–தமன் மெலாதி
05. மஸ்ஜிது அல் ரஹ்மான; (مسجد الرحمن)– ஜலான் பன்டாய் பஹாரூ
06. மஸ்ஜிது அல் ஷாகிரீன; (مسجد الشاكرين) - இடமென்
07. மஸ்ஜித் இந்தியா – ஜலான் மஸ்ஜித் இந்தியா
08. மஸ்ஜிது ஸலாஹுத்தீன் அல் அய்யூபp (مسجد صلاح الدين الأيوبي)–தமன் மெலாதி
09. மஸ்ஜித் நெகாரா – ஜலான் பெர்டானா, பஸார் செனி
10. மஸ்ஜித் ஜாமெ:.(المسجد الجامع)- ஜலான் துன் பெராக்

## REFERENCE

*01*. 'Abdullah Al 'Akil. (2013, December 6). *Dawr Al Masjid*. Retreived from**ww***w.ikhwanwiki.com/index.php?title =دور_المسجد*

02. Amal Khairi. (2013, December 6). *Al Masjid Al Ilaktrony: Afaq Da'wiyyah Mutajaddidah.* Retreived from http://www.saaid.net/afkar/158.htm

03. Ananymous. (2013, December 6). *Al Masajid wa Dawruha fi Al Ta'lim.* Retreived from www.slideshare.net/othman2a/ss-13183056

04. Farghali Jad Ahmad. (2013, December 6) *Al Dawr Al Tarbawi li Al Masjid.* Retreived from http://www.al-ittibaa.net/go/showthread.php?t=908

05. Muhammad Ratib Al Nabilsi. (2013, December 6). *Dawr Al Masjid fi Al Islam,* Retreived fromwww.nabulsi.com/blue/ar/art.php?art=2948&id=114&sid..

06. Raghib Al Sarjani. (2013, December 6). *Al Masjid wa dawruhu fi Hayath Al Ummah*. Retreived from http://islamstory.com/ar/ المسجد ودوره في حياة الأمة

07. Tajuddin, M.R.M.(1998)*The Mosque as a Community Development Centre: Programme and Architectural Design Guidelines for Contemporary Muslim Societies*, Johor Bahru, Malaysia: Penerbit Universiti Teknologi Malaysia.

08. Yusuf Al Qardawi. (2013, December 6). *Wazaif Al Masjid Al Mu'asirah.* Retreived from http://www.qaradawi.net/2010-02-23-09-38-15/4/5315-2011-10-30-11-27-17.html

நேர்காணல்கள்:

1. உஸ்தாத் ருஹைலி, பேஷ் இமாம், மஸ்ஜித் ஸலாஹுத்தீன் அல் அய்யூபி, தமன் மெலாதீ, மலேசியா.

2. உஸ்தாத் நஹ்ராவி பின் இத்ரீஸ், பேஷ் இமாம், அல் மத்ரஸா அல் இ.ஃதிஸாமிய்யா, செடபாக், தமன் மெலாதீ, கோலாலும்பூர், மலேசியா.

3. கலாநிதி இஸ்மத் ரம்ஸீ, ஆய்வாளர், மலாயா பல்கலைக்கழகம், கோலாலும்பூர், மலேசியா.

4. கலாநிதி ஏ.எம்.எம். மிஹ்லார், முதுநிலை விரிவுரையாளர், இஸ்லாமிய கலைகளுக்கான மலேசியப் பல்கலைக்கழகம், நிலாய், மலேசியா.

5. டட்டோ அப்துல் குத்தூஸ் பின் அப்துல் ஸலாம், தலைவர், அல் மஸ்ஜிதுல் அளீம், பன்டான் இன்டாஹ், கோலாலும்பூர், மலேசியா.

6. டட்டோ அப்துர் ரஹீம் பின் அப்துர் ரஹ்மான், தலைவர், மஸ்ஜித் ஸலாஹுத்தீன் அல் அய்யூபி, தமன் மெலாதீ, மலேசியா.

7. மஹ்மூத் பின் அப்துல் கரீம், முன்னாள் ஊழியர், மலேசிய மத்திய வங்கி, தமன் மெலாதீ, மலேசியா.

8. ஜனாப் கடாபி, பொறுப்பாளர், மனிஸ் அறபுக் கல்லூரி, செம்பகா, கோலாலும்பூர், மலேசியா.